©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 19] சென்னை, புதன்கிழமை, மே 11, 2022
சித்திரை 28, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2053

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 140, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சி [UD4–(2)]த் துறை, 7–12–2021]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர – நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் அட்டவணையின் நெடும்பத்தி (2) இல் குறிப்பிடப்பட்ட உள்ளூர் பகுதியை அதன் நெடும்பத்தி (1) இன் நிகரான பதிவில் குறிப்பிடப்பட்ட பெயருடன் கூடிய உள்ளூர் திட்டமிடல் பகுதியாக குறிப்பிடவேண்டுமென்ற அவரது நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்.

**அட்டவணை**

| *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியாக உருவாகும் பகுதி (நகராட்சி பெயர்)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| *கூடலூர்* | *கூடலூர் நகராட்சி* |

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள், மேற்சொன்ன உள்ளூர் பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார மன்றம் அல்லது நிறுவனம் இந்த செயற்குறிப்பு தொடர்பாக, எழுத்துமூலமாக அரசுக்கு யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை அளிக்கலாம் என்றும் மேற்சொன்ன கால அளவிற்குள் பெறப்படும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை அரசு கருதிப்பார்க்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை 'அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை சென்னை–600 009' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**ஹிதேஷ் குமார் எஸ்.மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

### திருத்தம்

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை-II

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி பட்டறை (Automobile Workshop) தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

### திருத்தம்

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை-III

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு சலவைத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

### திருத்தம்

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை-IV

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு முடித்திருத்துவோர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

### திருத்தம்

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

### அறிவிக்கை-V

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு தையல் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-VI**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு கைத்திறத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-VII**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு பனைமரத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-VIII**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-IX**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் ''தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)'', என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ''தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)'' என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-X**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு கைத்தறி ஓவியர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் "தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)", என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக "தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-XI**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு பொற்கொல்லர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் "தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)", என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக "தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-XII**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு மட்பாண்டத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் "தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)", என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக "தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-XIII**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2007 ஆம் ஆண்டு வீட்டு வேலை செய்பவர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் "தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)", என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக "தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-XIV**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2010 ஆம் ஆண்டு விசைத்தறி நெசவு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் "தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)", என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக "தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-XV**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I-1)]த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2010 ஆம் ஆண்டு நடைபாதை வியாபாரம், கடைகள் மற்றும் நிறுவனத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:–

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் ‘‘தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)’’, என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ‘‘தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிக்கை-XVI**

*[அரசாணை (நிலை) எண் 164, தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 2 நவம்பர் 2021]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும்,, பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், ஆலோசனைக் குழுவினைக் கலந்தாலோசித்த பின்னரும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 2015 ஆம் ஆண்டு சமையல் மற்றும் உணவளிப்பு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார், அதாவது:—

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில் ‘‘தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)’’, என்ற சொற்றொடர் வருமிடங்களிலெல்லாம், அதற்கு பதிலாக ‘‘தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்)’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

*[அரசாணை (ப) எண் 89, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 4 மார்ச் 2022.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதியுள்ள அறிவிக்கையின் கீழ்க்காணும் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன இரண்டு திங்கள் கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—**600 006** இல் டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—**600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **18.07.2018** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு **2** இல், **642** முதல் **643** பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா./**618/2018** ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்காணும் விவர அட்டவணையின் **(1)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**தோல் பதனீட்டு தொழிற்சாலைகள் மற்றும் தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு ஊதிய வீதங்கள் நாளொன்றுக்கு (ரூ.பை)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| **விலங்கின் ரோமத்தை நீக்குகிற பகுதி** | |
| 1. உதவி செய்பவர்கள் | 198.50 |
| 2. தோலை பளபளபாக்குபவர் | 200.50 |
| 3. ஸ்கட்டர்கள் (Scudders) | 200.50 |
| 4. ஆட்டின தோலை உரிப்பவர் | 200.50 |
| **தோல் பதனிடுதல் மற்றும் சாயம் தோய்க்கும் பிரிவு** | |
| 1. உதவி செய்பவர்கள் | 198.50 |
| 2. கொள்கலன் எடுத்துச் செல்பவர்கள் | 198.50 |

| *தொழிலாளர்களின் வகைகள்* | | *குறைந்தளவு ஊதிய வீதங்கள் நாளொன்றுக்கு (ரூ.பை)* |
|---|---|---|
| | *(1)* | *(2)* |
| 3. | ரோமம் நீக்குபவர்கள் | 203.50 |
| 4. | மயிரிழையைப் பகுப்பவர்கள் | 203.50 |
| 5. | ரோமம் நீக்க கற்றுக்கொள்பவர் | 198.50 |
| 6. | பாமிங் உதவியாளர்கள் | 198.50 |
| **சீரமைக்கும் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 198.50 |
| 2. | இயந்திரத்தை இயக்குபவர் | 198.50 |
| 3. | கையினால் சீரமைப்பவர் | 198.50 |
| **அடுக்கி வைக்கும் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 198.50 |
| 2. | பஸ்டர்கள் | 198.50 |
| 3. | அடுக்கி வைப்பவர்கள் | 198.50 |
| **இறுத்தெடுக்கும் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 198.50 |
| 2. | இறுத்தெடுப்பவர்கள் | 198.50 |
| **பணி நிறைவுப் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 198.50 |
| 2. | பதப்படுத்துபவர்கள் | 198.50 |
| 3. | தெளிப்பவர்கள் | 198.50 |
| **பணி நிறைவு பணியாளர் பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 198.50 |
| 2. | முரட்டுத்தோல் இயந்திரத்தை இயக்குபவர் | 198.50 |
| 3. | சாணைக்கல் சக்கரத்தை இயக்குபவர் | 198.50 |
| 4. | பளபளப்பு ஏற்படுத்தும் இயந்திரத்தை இயக்குபவர் (Cow) | 198.50 |
| 5. | சீராக்குபவர்கள் | 198.50 |
| 6. | அழுத்துகிற இயந்திரத்தை இயக்குபவர்கள் | 198.50 |
| 7. | கைகளினால் சலவை செய்பவர்கள் | 198.50 |
| 8. | தாடை ரோமம் நீக்குபவர்கள் | 198.50 |
| 9. | பளபளப்பு ஏற்படுத்தும் இயந்திரத்தை இயக்குபவர்கள் (Glaze Kid) | 202.00 |
| **பௌண்டரி பிரிவு** | | |
| 1. | உதவி செய்பவர்கள் | 198.50 |
| 2. | பொருத்துநர்கள் | 202.00 |
| 3 | ஒட்டுநர்கள் | 205.50 |
| 4. | கல் தச்சர்கள் | 203.50 |
| 5. | தச்சர்கள் | 203.50 |
| 6. | பொருத்துநர்கள், மற்றும் ஒட்டுநர்கள் (கற்றுக்கொள்பவர்கள்) | 198.50 |

| *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு ஊதிய வீதங்கள் நாளொன்றுக்கு (ரூ.பை)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| **புழக்கடை பிரிவு** | |
| 1. டீமர்கள் | 198.50 |
| 2. சீரமைப்பவர்கள் | 198.50 |
| **பொது** | |
| 1. மேஸ்திரிகள் | 6088.00 / திங்களொன்றுக்கு |
| 2. எழுத்தாளர்கள்/காசாளர்கள் | 6088.00 / திங்களொன்றுக்கு |
| 3. காவலாள் | 6024.00 / திங்களொன்றுக்கு |

**ஏனைய தோல் பதனீட்டு தொழிற்சாலைகள்:**

*(i)* விலங்கின் ரோமத்தை நீக்குகிற குழியில் அல்லது தோலை நீக்குகிற குழியில் தோல் மற்றும் உரிவைகளைப் பதனிடுவதற்கு, முதல் யூனிட்டுக்கு ரூபாய் 67.07 காசுகள் மற்றும் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கூடுதல் யூனிட் பணிக்கும் ரூபாய் 6.99 காசுகள் வீதம் ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

*(ii)* பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்கு, நாளொன்றுக்கு ரூபாய் 198.50 வழங்கப்பட வேண்டும்.

**செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் பெறுகிற தொழிலாளர்கள்:**

விலங்கின் ரோமத்தை நீக்குகிற அல்லது தோலை நீக்குகிற குழியில் முதல் யூனிட்டைப் பொறுத்த வரையில், மேற்கொள்ளப்பட்ட பணிக்காக ரூபாய் 104.79 காசுகளும், மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கூடுதல் யூனிட் பணிக்கும் ரூபாய் 46.12 காசுகள் வீதமும் ஊதியம் வழங்கப்பட வேண்டும். விலங்கின் ரோமத்தை நீக்குகிற அல்லது தோலை நீக்குகிற குழியில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கூடுதல் யூனிட் பணிக்கும் ரூ. 6.99 வழங்கப்பட வேண்டும்.

**தோல் பதனீடு மற்றும் தோல் பொருள் தயாரிப்பு தொழிலில் உள்ள பொது வகையினர்**

| | | |
|---|---|---|
| (1) எழுத்தர்/காசாளர் | – | மாதமொன்றுக்கு ரூபாய் 6088.00 |
| (2) மேஸ்திரிகள் அல்லது மேற்பார்வையாளர்கள் | – | மாதமொன்றுக்கு ரூபாய் 6088.00 |
| (3) காவலாள் | – | மாதமொன்றுக்கு ரூபாய் 6024.00 |

**விளக்கங்கள்**

*(i)* மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே குறிப்படப்பட்டவாறு அகவிலைப்படி தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். அகவிலைப்படியை கணக்கிடுவதற்கு 2010 ஆம் ஆண்டிற்கான அனைத்திந்திய நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதன் அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 176 புள்ளிகளாகும்). 176 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு 1.12 காசுகள் (ஒரு ரூபாய் பன்னிரண்டு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

*(iii)* ஏதேனும் தோல் பதனீட்டு தொழிற்சாலை மற்றும் தோல் பொருள் தயாரிப்பு தொழிலில் செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறுகிற தொழிலாளர்களை பணியில் அமர்த்துகிறவிடத்து, வழக்கமான வேலை நாள் ஒன்றுக்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்குகிற ஊதியம், அந்த வகையினருக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைவிட குறைவாக இருக்கக்கூடாது.

*(iv)* நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

*(v)* மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

*(vi)* தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (ப) எண் 157, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாடு (J1)த் துறை, 7 ஏப்ரல் 2022.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3—ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5—ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்காணும் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன சட்டத்தின் 5—ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக யாதொரு நபரிடமிருந்து வரப்பெறும் யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும், என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை டி.எம்.எஸ். வளாகம், சென்னை—600 006 இல் உள்ள தொழிலாளர் துறை ஆணையாளர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 26.12.2018 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2ல், 1172 மற்றும்1173 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/1085/2018 ஆம் எண் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையில் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் சாலை அமைத்தல் அல்லது பராமரித்தல் அல்லது கட்டடக் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்தளவு ஊதிய வீதங்களை, இந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**சாலை அமைத்தல் அல்லது பராமரித்தல் அல்லது கட்டடக் கட்டுமானத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண் (1)* | *பணியாளர்களின் வகைகள் (2)* | *நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (3)* | | |
|---|---|---|---|---|
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* |
| | | *ரூ. காசு* | *ரூ. காசு* | *ரூ. காசு* |
| (1) | **கல் உடைப்பவர் அல்லது கல் நொறுக்குபவர் அல்லது கல் நசுக்குபவர்** | | | |
| | வகை I | 622.50 | 611.50 | 588.00 |
| | வகை II | 603.00 | 596.00 | 582.00 |
| (2) | **கொத்தனார் அல்லது செங்கல் பாவுபவர்** | | | |
| | வகை I | 625.00 | 622.50 | 596.00 |
| | வகை II | 611.50 | 630.00 | 588.00 |
| (3) | **தச்சர்** | | | |
| | வகை I | 625.00 | 622.50 | 596.00 |
| | வகை II | 611.50 | 603.00 | 588.00 |
| (4) | **வண்ணம் பூசுபவர் அல்லது மெருகெண்ணெய் பூசுபவர்** | | | |
| | வகை I | 603.00 | 596.00 | 582.00 |
| | வகை II | 588.00 | 582.00 | 566.00 |
| (5) | **கம்பி வளைப்பவர் உட்பட பொருத்துநர்** | | | |
| | வகை I | | | |
| | வகை II | 603.00 | 596.00 | 582.00 |
| | | 588.00 | 582.00 | 566.00 |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* |
| | | *ரூ. காசு* | *ரூ. காசு* | *ரூ. காசு* |
| (6) | **சாலைக் குழாய்ப் பணிகளுக்காக குழாய் வேலை செய்பவர்** | | | |
| | வகை I | 603.00 | 596.00 | 582.00 |
| | வகை II | 588.00 | 582.00 | 566.00 |
| (7) | **மின் பணியாளர்/ஆய்வகத் தொழில் நுட்பப் பணியாளர்** | | | |
| | வகை I | 622.50 | 611.50 | 588.00 |
| | வகை II | 603.00 | 596.00 | 582.00 |
| (8) | **இயந்திரக் கம்மியர்** | | | |
| | வகை I | 622.50 | 611.50 | 588.00 |
| | வகை II | 603.00 | 596.00 | 582.00 |
| (9) | **கிணறு தோண்டுபவர்** | | | |
| | (i) ஆழக் கிணறு தோண்டுபவர் | 640.50 | 625.00 | 611.50 |
| | (ii) சாதாரணக் கிணறு தோண்டுபவர் | 603.00 | 596.00 | 588.00 |
| (10) | **பற்றவைப்பவர்** | 625.00 | 622.50 | 596.00 |
| (11) | **தலைமைக் கூலியாள்** | 464.50 | 460.00 | 454.00 |
| (12) | **கூலியாள் (மஸ்தூர்)** | | | |
| | வகை I | 454.00 | 449.00 | 443.00 |
| | வகை II | 445.00 | 440.00 | 434.00 |
| (13) | தண்ணீர் தெளிப்பவர் அல்லது கலவைக்காரர் (சாலை பரத்துதல்) / ஒட்டு போடும் கருவி இயக்குபவர் | 572.00 | 563.00 | 557.50 |
| (14) | மரம் அல்லது கல் அடைப்பவர் | 572.00 | 563.00 | 557.50 |
| (15) | **சேறு அகற்ற கிணற்றுள் செல்பவர்** | | | |
| | வகை I | 603.00 | 596.00 | 588.00 |
| | வகை II | 588.00 | 582.00 | 574.00 |
| (16) | சுத்தியல்காரர் | 577.00 | 572.00 | 563.00 |
| (17) | ஓலை முடைபவர் | 566.00 | 560.00 | 552.00 |
| (18) | மேஸ்திரி / மேற்பார்வையாளர் | 640.50 | 625.00 | 511.50 |
| (19) | **கருமார்** | | | |
| | வகை I | 625.00 | 622.50 | 596.00 |
| | வகை II | 611.50 | 603.00 | 588.00 |
| (20) | மரம் அறுப்பவர் | 611.50 | 603.00 | 588.00 |
| (21) | இடைவெளி அடைப்பவர் | 577.00 | 572.00 | 563.00 |
| (22) | கலவை இயந்திரம் இயக்குபவர் உட்பட கலவைக்காரர் | 596.00 | 588.00 | 574.00 |
| (23) | பம்ப் இயக்குபவர் | | | |
| (24) | கலவை இயந்திரம் இயக்குபவர் | | | |
| (25) | லாரி ஓட்டுநர் | 611.50 | 596.00 | 588.00 |

| *தொடர் எண்* *(1)* | *பணியாளர்களின் வகைகள்* *(2)* | *நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* *(3)* | | |
|---|---|---|---|---|
| | | *மண்டலம்* A | *மண்டலம்* B | *மண்டலம்* C |
| | | *ரூ. காசு* | *ரூ. காசு* | *ரூ. காசு* |
| (26) | லாரி கிளீனர் (Lorry Cleaner) | 577.00 | 572.00 | 563.00 |
| (27) | ரோடு உருளை இயந்திரம் ஓட்டுநர் / பாரச் சக்கர ஓட்டுநர் | 611.50 | 596.00 | 588.00 |
| (28) | குமாஸ்தா (எழுத்தர் அல்லது நேரக் காப்பாளர்)/ பண்டகக் காப்பாளர் | 588.00 | 582.00 | 574.00 |
| (29) | **கனரக பொறியியல் கட்டுமானம் அல்லது கனரக இயந்திர பாலம் அமைப்பு வேலையில் ஈடுபடுத்தப்படும் கலாசி அல்லது சீரங்கு முதலானோர்** | | | |
| | வகை I | 640.50 | 625.00 | 611.50 |
| | வகை II | 625.00 | 622.50 | 596.00 |
| (30) | பிக்கோட்டா பணியாளர் (Picothaman) | 560.00 | 552.00 | 546.00 |
| (31) | காவலாள் / உதவியாள் | 560.00 | 552.00 | 546.00 |
| (32) | மொசைக் மெருகேற்றுபவர் | 625.00 | 622.50 | 596.00 |
| (33) | ஜேசிபி இயக்குபவர் | 656.00 | 640.50 | 627.00 |

**விளக்கங்கள்: (1)** மண்டலங்களின் வகைப்பாடுகள் பின்வருமாறு:—

***மண்டலம்* A:** அனைத்து மாநகராட்சிகள் மற்றும் காப்பு வனம் மற்றும் அதனைச் சுற்றி ஐந்து கி.மீ. உட்பட்ட பகுதியில் நடைபெறும் வேலைகளும் கீழ்க்கண்ட மலை வாழிடங்களும் அடங்கும்.

***மலை வாழிடங்கள்***

(1) நீலகிரிப் பீடபூமி

(2) கோயமுத்தூர் மாவட்டத்தில் வால்பாறை குறுவட்டம்

(3) சேர்வராயன் குன்றுகள்

(4) கொடைக்கானல்

(5) பீர்மேடு

(6) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சரக களக்காடு காப்புவனப்பகுதியில் செங்கல்தேரி

(7) விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் சரக திருவில்லிப்புத்தூர் காப்புவனப்பகுதியிலுள்ள முதலியார் ஊத்து.

(8) நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டம்

(9) வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைகள்

**மண்டலம்—B:** அனைத்து வகை நகராட்சிகளும் அடங்கும்.

**மண்டலம்—C: A மற்றும் B** மண்டலங்களில் சேர்க்கப்படாத ஏனைய பகுதிகள் அனைத்தும்

(2) தொழிலாளர்களை நிலை—1 மற்றும் நிலை—2 என்ற வகைப்பாடு உடல் திறன், தனித்திறமை, இயங்குதிறம் மற்றும் பணி முடிக்கும் அளவு ஆகியவற்றின் அடிப்படையிலானது ஆகும்.

(3) செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், நாளொன்றுக்கு எட்டு மணி நேரத்தில் அவர்கள் பெறும் ஊதியம் அதே வகையிலான தொழிலாளர்களுக்கு தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ள ஊதியத்திற்குக் குறையக்கூடாது. மேற்குறிப்பிட்ட கூலி வீதங்களைக் கணக்கிடும்போது ஒரு நாள் பணி என்பது எட்டு மணி நேர வேலையாகும். பணியாளர் எட்டு மணிநேரத்திற்கும் குறைவாகப் பணியாற்றினால் அதற்குத் தக்கவாறான வீதத்தில் ஊதியம் கணக்கிடப்படவேண்டும்.

**(4) அகவிலைப்படி : (1)** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ. 2.69 (இரண்டு ரூபாய் அறுபத்தொன்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(5) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(6) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(7) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (ப) எண் 154, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1)த் துறை, 7 ஏப்ரல் 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3—ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி 5—ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன சட்டத்தின் 5—ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக யாதொரு நபரிடமிருந்தும் வரப்பெறுகிற யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்று, இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை சென்னை—600 006 சுகாதார மருத்துவப் பணிகள் வளாகத்திலுள்ள தொழிலாளர் நல ஆணையாளர் வாயிலாக அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948—ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3—ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மற்றும் 5—ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 09—01—2019—ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II-பிரிவு 2—இல், 31 மற்றும் 32 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.ந,/26/2019 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் சீருந்துகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் சீருந்துகளில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூ.காசு)* |
|---|---|
| *(1)* | *(2)* |
| *ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் (மீட்டர் பொருத்தப்பட்டது)* | *நாளொன்றுக்கு 443.00 (அல்லது) மாதமொன்றுக்கு 11500.00* |
| *சீருந்து ஓட்டுநர்கள் (மீட்டர் பொருத்தப்பட்டது)* | *நாளொன்றுக்கு 503.00 (அல்லது) மாதமொன்றுக்கு 13044.00* |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

*(i)* அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்) 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்களொன்றுக்கு ரூ. 71.40 (எழுபத்து ஒன்று ரூபாய் மற்றும் நாற்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழக்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) *(i)* அன்றாட குறைந்தளவு ஊதிய வீதங்களில், வாராந்திர விடுமுறை ஊதியங்களும் அடங்கும்.

*(ii)* அகவிலைப்படியின் அன்றாட வீதத்தைக் கணக்கிடுவதற்கு அகவிலைப்படியின் மாதாந்திர வீதங்களை 26ஆல் வகுக்க வேண்டும்.

(3) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கின்ற இடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ஆர். கிர்லோஷ்குமார்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.